Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை.

மலர் I.] 1941-ம்௵ ஆகஸ்ட்டு௴ 8௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 21

## ஜப்பானின் இருநோக்கங்கள்.

### ரஷ்யாவைத் தாக்குதல்; தாய்லாந்தை அதிக்கிரமித்தல்:

### விஷி-ஜப்பான் ஒப்பந்தமும், அமெரிக்காவின் மனப்பான்மையும்.

### தூரக்கிழக்கரங்கத்தில் குடியரசுகளின் தயாரான ஏற்பாடுகள்.

ஜப்பான் எதேச்சாதிகாரத்தந்திரங்களை நன்றாகக் கற்றுக்கொண்டிருக்கிறது. தனக்கு விரோதமானவர்கள் தன்னைச்சுற்றி வளைத்துக்கொள்ள முயற்சிக்கிறார்கள் என்று அது முறையிடுகிறது. "சுற்றி வளைத்துக்கொள்ளுதல்" என்பது ஜெர்மனியின் பழைய மந்திரவார்த்தை. ஜெர்மனி இந்த யுத்தத்தை ஆரம்பிப்பதற்குமுன், குடியரசு நாடுகள் தன்னைச்சுற்றி வளைத்துக்கொள்ள முயற்சித்தன என்ற ஒரு நொண்டிச் சமாதானத்தைக்கூறி, போர் தொடங்கிற்று. அதைப்போல ஜப்பானும் இப்போது ஆரம்பித்திருக்கிறது. தன்னை யாரோ சுற்றி வளைத்துத்தாக்கப்போவது போலவும், அதற்குத்தான் அஞ்சி தன்னைப்பாதுகாத்துக்கொள்ள முன்ஜாக்கிரதையான ஏற்பாடுகள் செய்வதுபோலவும், ஜப்பான் பாசாங்கு செய்கிறது.

இண்டோ-சீனாவிடம் ஜப்பான் செய்துகொண்ட ஒப்பந்தம் தற்பாதுகாப்புக்காகச் செய்யப்பட்டது என்று ஜப்பான் கூறுகிறது. அந்த ஒப்பந்தத்தின்படி இண்டோ-சீனாவில் உள்ள ஆகாய விமானத் தளங்களும், கடற்படைத்தளங்களும் ஜப்பானால் கைப்பற்றிக்கொள்ளப்பட்டன. ஜப்பான் கூறும் நொண்டிச் சமாதானத்தைக்கண்டித்து, ஆஸ்திரேலிய யுத்த மந்திரி, மிஸ்டர் ஸ்பெண்டர் கூறியிருக்கிறார். கொஞ்சமாவது வெட்கமில்லாமல் ஜப்பான் இம்மாதிரியான சாக்கு சொல்வது மிகவும் கடுமையான குறும்புத்தனம் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தூரக்கிழக்கரங்கத்தில் இப்போதிருக்கும் நிலைமையில் இரண்டு விஷயங்கள் விளக்கமாகப் புலப்படுகின்றன. ஒன்று, ஜப்பான் மஞ்சூகோவுக்குத் துருப்புகள் அனுப்பியிருப்பது; இரண்டாவது, சையாம் என்ற தாய்லாந்தின் எல்லையோரத்தில் ஜப்பானியத்துருப்புகள் ஒன்று சேர்ந்திருப்பது. மஞ்சூகோவுக்குத் துருப்புகள் அனுப்பிருப்பதால், ரஷ்யாவைத்தாக்கவேண்டும் என்ற நோக்கம் ஜப்பானுக்கிருப்பதாக நன்றாய்த் தெரிகிறது. ரஷ்யா இப்போது ஜெர்மனியோடு மகத்தான ஒரு மாபெரும் யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறது. இந்த சமயம்தான் ரஷ்யாவைத்தாக்கவேண்டிய சமயம் என்று ஜப்பான் நினைத்திருந்தாலும், அதன் பேராசையை அழிப்பதற்கு எதிர்ப்பலம் கிழக்கில் இருக்கிறதென்பது ஜப்பானுக்குத்தெரியும். ஆகையால் ஜப்பான் தன்னுடைய விருப்பத்தை அடக்கிக்கொண்டிருக்கிறது.

#### தாய்லாந்தில் துருப்புகள்.

தாய்லாந்தின் எல்லையோரத்துக்கு ஜப்பான் துருப்புகளை அனுப்பியதைப்பற்றிப் பலவிதமாகச் சொல்லப்படுகிறது. தாய்லாந்தில் உற்பத்தியாகும் ரப்பர், தகரம், அரிசி, முதலியவைகளை எல்லாம் ஜப்பானுக்குக் கொடுத்துவிடவேண்டும்; தாய்லாந்திலுள்ள ஆகாய விமானத்தளங்களையும், கடற்படைத் தளங்களையும் உபயோகிக்க ஜப்பானுக்கு அனுமதி கொடுக்கவேண்டும்; இவைகளுக்குப்பதிலாக லேயாஸ் என்ற மாகாணத்தையும், பண்டைக்கால நகரமாகிய அங்காரையும், ஜப்பான் தாய்லாந்துக்குக் கொடுத்துவிடும் என்று சிலவதந்திகள் உலவுகின்றன. சீனாவில் ஜப்பானால் ஏற்படுத்தப்பட்ட பொம்மை அரசாங்கங்களை, தாய்லாந்து அங்கீகரிக்கப் போகும் தறுவாயில் இருக்கிறதென்று சொல்லப்படுகிறது. தாய்லாந்திலிருந்து ஜப்பானுக்கு வரும் இறக்குமதி சாமான்கள் சௌகரியத்துக்காக, ஜப்பானிலுள்ள யோகோஹாமாஸ்பீஷி பாங்கிக்கும் தாய்லாந்து பாங்கி சிண்டிகேட்டுக்கும், ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. அதன்படி, தாய்லாந்து 160 லட்சம் 'யென்' (ஜப்பானிய நாணயம்) ஜப்பானுக்கு கடனாகக் கொடுக்க ஒத்துக்கொண்டிருக்கிறது.

இதெல்லாம் தவிர்த்து, தாய்லாந்து ஜப்பானுக்கு நன்றியறிதலுடன் இருக்கவேண்டிய நிலைமையையும் நாம் மறத்தல்கூடாது. தாய்லாந்துக்கும், இண்டோ-சீனாவுக்கும் இடையில் மத்தியஸ்தமாயிருந்து, 1893-ம்௵த்திலிருந்து கொஞ்சங் கொஞ்சமாக இழக்கப்பட்ட பிரதேசங்களையெல்லாம் தாய்லாந்துக்கு ஜப்பான் வாங்கிக்கொடுத்திருக்கிறது. சென்ற பிப்ரவரி மாதம் தான் விஷி அரசாங்கம் கைப்பற்றிய பிரதேசங்களைத் தாய்லாந்துக்குக் கொடுக்க ஒப்புக்கொண்டது.

பிரான்சுடனும், பிரிட்டனுடனும், தாய்லாந்து பரஸ்பர நட்புடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறது. ஜப்பானுடன் செய்துகொண்ட நட்பு ஒப்பந்தம், இரு நாடுகளும் ஒன்றின் பிரதேசத்தில் மற்றொன்று பிரவேசிப்பதில்லை என்று நிர்ணயித்திருக்கிறது. தாய்லாந்தினுடைய பூகோள அமைப்பு திருப்திகரமானதாயில்லை. அதன் கிழக்கில் இண்டோ-சீனாவும், வடக்கிலும் மேற்கிலும், பர்மாவும், தெற்கில் மலேயா நாடுகளும் இருக்கின்றன. சீனாவுக்கும் தாய்லாந்துக்கும் பொதுவான எல்லை கிடையாது.

தாய்லாந்துக்கு 21 படைகளடங்கிய ஒரு பட்டாளமும், 13 குதிரைப்படைகளும், அநேக கோட்டைப் படைகளும், பீரங்கிப்படைகளும் இருக்கின்றன. ஆகாய விமானப்படை, அதன் தரைப்பட்டாளத்தின் ஒரு பகுதி. பலவிதமான 207 ஆகாயவிமானங்கள், 2 கரையோரப் பாதுகாப்புக்கப்பல்கள், ஒரு நாசகாரிக்கப்பல், 12 'டார்பிடோ' படகுகள், 4 சப்மரீன்கள், 12 கரையோர மோடார் 'டார்பிடோ' படகுகள் தாய்லாந்தின் பாதுகாப்புப் படையைச் சேர்ந்தவை. சுமார் 2,000 மைல் நீளமுள்ள ரயில் பதையும், 1,500 மைல் நீளமுள்ள ரோட்டும் தாய்லாந்துக்குச் சொந்தமானவை. தாய்லாந்தின் புதுமாதிரியான கப்பல்களெல்லாம் ஜப்பானால் செய்யப்பட்டவை.

#### கஷ்டமான நிலைமை.

தாய்லாந்து இப்போது மிகுந்த கஷ்டமான நிலைமையிலிருக்கிறது என்று ராய்ட்டர் செய்திகள் அறிவிக்கின்றன. அதன் பிரதேசத்தைக் காப்பதாக, அமெரிக்காவும், பிரிட்டனும் வாக்களிக்கவில்லை. ஜப்பான் பயமுறுத்துவதைப்பார்த்தால், கூடியசீக்கிரம் தாய்லாந்து ஜப்பானுக்கு அடிமையாகும் போலிருக்கிறது சம்பவங்கள் அதிவேகமாக நடைபெறும்போல் தோன்றுகின்றன.

ஜப்பானுடைய அதிக்கிரமக் கொள்கை அமெரிக்காவின் பாதுகாப்பைப் பாதிக்கிறது என்பது அமெரிக்கர்களுடைய அபிப்பிராயம். விஷி-ஜப்பான் ஒப்பந்தம் அமெரிக்காவின் அமைதியைக் குலைப்பதாயிருக்கிறதென்றும், அதனால் ஜப்பானுக்கு விரோதமாக

அமெரிக்கா சில பொருளாதார பகிஷ்காரங்களைச் செய்திருக்கிறதென்றும், மேற்கு கோளத்தின் வெளியிலுள்ள நாடுகளுக்கு, ஆகாய விமானங்களுக்கு உபயோகப்படக்கூடிய மோடார் எண்ணெய்கள் முதலியவை ஏற்றுமதி செய்யக்கூடாதென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதென்றும், அமெரிக்க அரசாங்க உதவி காரியதரிசி மிஸ்டர் சம்னர் வெல்ஸ் கூறியிருக்கிறார். இந்த பகிஷ்காரம் ஜப்பானை அதிகமாகப் பாதிக்கும். ஏனென்றால், ஆகாய விமானப் பெட்ரோல் செய்யும் மூலப் பொருள்கள் கூட பகிஷ்காரத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்கா, பிலிப்பைன் தீவுகளிலுள்ள பாதுகாப்புகளைப் பலப்படுத்தியிருக்கிறது. அமெரிக்க கப்பற் படை எந்த நெருக்கடியான நிலைமைக்கும் தயாராக இருக்கிறது. பிரிட்டன் தனக்காகப் பிரத்தியேகமான உரிமைகளும், சலுகைகளும், கேட்கவில்லை. ஆனால், அப்படிப்பட்ட உரிமைகளும், சலுகைகளும் வேறெந்த நாட்டிற்கும் கொடுக்கக்கூடாதென்பதில், பிரிட்டன் கவனமாய் இருக்கிறது.

### பிரிட்டன் தயாராயிருக்கிறது.

அவசியம் நேர்ந்தால், பிரிட்டன் பசிபிக் மகா சமுத்திரத்தில் தன்னுடைய கப்பற் படையை அனுப்புவதற்குத் தயாராயிருக்கிறது என்று ஆஸ்திரேலிய கப்பற் படை மந்திரி மிஸ்டர் ஹியூக்ஸ் தெரிவித்திருக்கிறார். இந்த அறிவிப்பு மலேயாவின் தலைநகரான சிங்கப்பூரில் வரவேற்கப்பட்டிருக்கிறது. மலேயாவில் உள்ள பிரிட்டிஷ் துருப்புகள் திறமையோடு கூடியவையாயிருக்கின்றன என்று நேரில்கண்ட ஒரு அமெரிக்கர் கூறியிருக்கிறார். ஆஸ்திரேலிய சிப்பாய்களும், இந்தியப் பட்டாளங்களும் தகுந்த யுத்த முஸ்தீப்புடன் இருக்கின்றன என்று அவர் சொல்லுகிறார்.

பர்மாவிலும் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பர்மாவிலுள்ள பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை அதிகமாக பலப்படுத்தப்பட்டிருக்கிறது. அமெரிக்காவில் கட்டப்பட்ட அநேக பீரங்கிகளையுடைய புரூஸ்டர் பபலோ போர் விமானங்கள் வந்து சேர்ந்திருக்கின்றன. ஆகாய விமானத் தாக்குதல்களைத் தடுப்பதற்கும், விமானத் தாக்குதல்களைத் தானே செய்வதற்கும், பர்மா மிகத் தகுதியாக ஆக்கப்பட்டிருக்கிறது. சீனா, தாய்லாந்து இவைகளின் எல்லையோரங்களில் ஆகாய விமானச்சாலைகள் கட்டப்பட்டிருக்கின்றன; கட்டப்பட்டும் வருகின்றன. விமானங்களை ஒழுங்காக வைத்திருப்பது, பழுது பார்ப்பது முதலிய வேலைகளுக்கு வேண்டிய யந்திர சாதனங்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. புதர்களில் சண்டை போடுவதற்குப் பயிற்சி பெறுவதற்காக, பிரிட்டிஷ் துருப்புகளும், ஆஸ்திரேலியத் துருப்புகளும், பர்மாவுக்கு வந்துள்ளன.

தாய்லாந்துக்கு அருகாமையிலுள்ள கம்போடியா பிரதேசத்தில் சியம்ரீப், கோம்பஸ்டாம், புனோம்பென் முதலிய இடங்களில் உள்ள ஆகாய விமானச்சாலைகளை ஜப்பானியர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள். இது ஒரு கவலைக்கிடமான காரியந்தான். ஆனால், தூரக் கிழக்கரங்கத்தில் இப்போதுள்ள நிலைமை பாதிக்கப்படுமானால், அதை எதிர்த்து அமெரிக்கா, பிரிட்டன், சீனா, டச்சு கிழக்கிந்தியத் தீவுகள் போர் புரியும்.

எதிர் நோக்கியிருக்கும் நிலைமை கவலைக்கிடமானதாயிருந்தாலும், அனாவசியமாகப் பொது மக்கள் பயப்படும்படியானதாய் இல்லை. ஏனென்றால், பாதுகாப்புக்கும், எதிர்த்துப் போர் புரிவதற்கும், சகலவித யுத்த முஸ்தீப்பு ஏற்பாடுகளும் திருப்திகரமாய்ச் செய்யப்பட்டிருக்கின்றன.

---

# ரஷ்யாவில் ஜெர்மானியர் சண்டை:

## ஏழுவாரமாகியும், நிலைமை மாறவில்லை.

### ஜெர்மனியின் புதிய முயற்சி.

ரஷ்யப் பட்டாளங்களின் எதிர்த்துப் போராடும் பலத்தை உடைப்பதற்காக, ஜெர்மனி தன்னுடைய மின்னல் தாக்குதல் முயற்சியை மூன்றாவது தடவை செய்வதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்துகொண்டு வருகிறது. சென்ற வாரத்தில் கிழக்கரங்க யுத்தத்தில் ஜெர்மனி சற்று சாவதானமாயிருந்ததன் காரணம் இதுதான் இந்த மூன்றாவது முயற்சி யுத்தத்தின் போக்கையே அடியோடு திருப்பக்கூடிய முயற்சியாயிருக்கலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது. ஆனால் இப்போதுள்ள நிலைமை ரஷ்யாவுக்கு அனுகூலமாயிருக்கிறது. ஜெர்மானியர்களுக்கு உணவு முதலிய பொருள்கள் வருவதற்குப் போக்குவரத்து பாதை சரியான முறையில் இல்லை. ஆனால் ரஷ்யர்களுக்கும் அவர்களுடைய 'சப்ளை' தளங்களுக்கும் இருக்கின்ற நெருங்கிய தொடர்பு உடைக்கப்படவில்லை. இந்த தொடர்பை அவர்கள் விடாமல் காப்பாற்றி வருவார்களானால், ஜெர்மனியின் மூன்றாவது முயற்சி வரும்போது யுத்த அனுகூலம் ரஷ்யர்களுடைய பக்கத்தில்தான் இருக்கிறது.

ஜெர்மானியர்களுக்கு, இனிமேல் இப்போதிருப்பதைவிட அதிகமான அசௌகரியங்கள் ஏற்படும். அவர்கள் ரஷ்யாவில் எவ்வளவுதூரம் உள்செல்கிறார்களோ அவ்வளவுதூரம் 'சப்ளை' சாமான்கள் வருவதற்குக் கஷ்டமாயிருக்கும். ஏனென்றால், ரஷ்யத் துருப்புகள், முன்னேறியிருக்கும் ஜெர்மன் துருப்புகளுக்கும், பின்னால் வரும் 'சப்ளை'களுக்கும் தொடர்புகள் ஏற்படுவதை வெட்டிக்கொண்டே வருகின்றன. ரஷ்யாவில் கூடியசீக்கிரம் மழைக் காலம் வரப்போகிறது. ரஷ்யாவில் மழைக் காலம் என்றால் தாங்கமுடியாத குளிர். நெப்போலியனுடைய பட்டாளம் ரஷ்யாவைத்தாக்கி இந்தக்குளிரில் அகப்பட்டுக்கொண்டு ஏராளமாகச் சேதமாயிற்று. ஜெர்மனியின் மூன்றாவது மின்னல் தாக்குதல் தோல்வியடைந்தால், ஜெர்மன் துருப்புகளுக்கு அதே கதி நேரும். மழைக்காலத்தில் அகப்பட்டுக்கொண்ட ஜெர்மன் துருப்புகளை ரஷ்யர்கள் அடிக்கடி தாக்குவதற்கு சௌகரியமாயிருக்கும். ரஷ்யர்கள் தம் நாட்டுக் குளிரைத் தாங்கிக் கொள்ளுவார்கள்; ஆனால் ஜெர்மானியர்கள் தாங்குவது கொஞ்சம் கஷ்டம்.

### ஜெர்மனியின் சேதம்.

சென்ற இரண்டு வாரங்களாக, 1,500 மைல் நீளத்தில் ரஷ்யாவில் பெருத்த சண்டை நடைபெற்று வருகிறது. ஜெர்மானியர்கள் தாங்கள் முன்னேறிச் செல்லுமிடங்களிலெல்லாம் ரஷ்யப் பட்டாளங்களைச் சுற்றி வளைத்துக்கொள்வது என்ற யுத்த முறையைக் கையாண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் ரஷ்யர்கள் ஜெர்மானிய வட்டாரங்களை உடைத்து வெளியில் சென்றிருக்கிறார்கள். இந்தச் செய்தி நடுநிலைமைப் பிரதேசங்களிலிருந்து வந்திருக்கிறது. ஜெர்மானியர்கள் பிரமாதமான வெற்றிகளை அடைந்துவிட்டதாக வீண் பெருமையடித்துக் கொள்கிறார்கள். உதாரணமாக, சென்ற வாரம் 10,000 கைதிகளை பீபஸ் ஏரிக்கு மேற்கில் பிடித்ததாகக் கூறுகிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. ஜெர்மானியர்கள் படும் பெருங் கஷ்டங்களுக்குத் தகுந்த பலன்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை; அதற்கு மாறாக, ஏராளமான சேதங்கள் தான் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றன. ரஷ்ய—ஜெர்மன் யுத்தம் தொடங்கிய முதல் மூன்று வாரங்களில், ஜெர்மன் துருப்புகளில் இறந்தவர்கள், காயப் பட்டவர்கள், கைதியானவர்கள் எல்லாம் சேர்த்தால் 10 லட்சம் ஆகிறது; சேதப்பட்ட ஜெர்மன் ஆகாய விமானங்கள் 23,001, டாங்கிகள் 3,000. இதல்லாமல், ஜெர்மன் படைகளில் மிகச் சிறந்தவை என்று சொல்லப்பட்ட பல படைகள் அடியோடு அழிக்கப்பட்டன.

ரஷ்ய யுத்தத்தின் ஏழாவது வாரத்தில், மாஸ்கோவில் நம்பிக்கையும் தைரியமும் அதிகரித்துக் கொண்டு வருகின்றன என்று ராய்ட்டரின் மாஸ்கோ நிருபர் கூறுகிறார். ரஷ்ய யுத்தம் நீடித்து நடக்கும் என்ற பொருள்படும்படி ஜெர்மன் பிரசாரம் நடைபெற்று வருகிறது. வரப்போகும் மாதம் இந்த யுத்தத்தில் மிகவும் முக்கியமானதும் நெருக்கடியானது மாய் இருக்கும். ஆனால் மாஸ்கோ மிகுந்த

நம்பிக்கையுடன் இருக்கிறது. ஜெர்மன் விமானங்களின் வெடி குண்டுத் தாக்குதல்களை அது லட்சியம் செய்யவில்லை. ஜெர்மனி மாஸ்கோவை கடுமையான விமானத் தாக்குதல்களுக்கு உட்படுத்த முடியாமலிருப்பதற்குப் பல காரணங்களுண்டு. அவைகளில் ஒன்று, ரஷ்ய யுத்த முன்னணிக்கு அருகாமையில் உள்ள ஜெர்மன் விமானத்தளங்கள், ரஷ்ய விமானங்களால் பலமாகத் தாக்கப்பட்டு வருவதுதான். இராக்கால அளவு அதிகப்படும்போது, அதிகமான ஜெர்மன் விமானத்தாக்குதல்களை எதிர்பார்க்கலாம். ஆனால் மாஸ்கோவிலும், இதர இடங்களிலும் விமானஎதிர்ப்பு ஏற்பாடுகள் மிகத்திறமையான முறையில் செய்யப்பட்டிருக்கின்றன.

பொதுவாக, ஜெர்மனியின் மின்னல் தாக்குதல் முறைகள் ரஷ்யாவில் பயன்பெற்றதாகத் தெரியவில்லை. ரஷ்யர்கள் ஜெர்மானியர்களை எதிர்த்து, தைரியத்துடன் போர்புரிந்து வருகிறார்கள். முதலில் முன்னேறிவரும் டாங்கிப்படைகளை சுற்றி வளைத்துக்கொண்டு போர்புரிதல் ரஷ்யர்களுடைய முக்கியமான முறைகளில் ஒன்று. போலந்திலும், மேற்கு ரஷ்யாவிலும் ரஷ்யத்துருப்புகள் செய்யும் குரங்குச்சண்டை ஜெர்மானியர்களுடைய பலத்தைக் குறைத்துக்கொண்டு வருகிறது. இவையெல்லாம் ஜெர்மன் சிப்பாய்களின் மனவுறுதியையும், தைரியத்தையும் குறைத்திருக்கின்றன. ஜெர்மன் சிப்பாய்கள் ஒரு திட்டம் போட்டுக்கொண்டு, அதன்படி போர்புரிந்து, வெற்றிபெறும் வழக்கமுடையவர்கள். ரஷ்யாவில் இந்த வழக்கம் பயன்படாமற் போனதைக்கண்டு அவர்கள் கலவரமடைந்திருக்கிறார்கள்.

## முர்மான்சிக்கைப்பற்றிய பொய்.

பெட்சாமோவை பிரிட்டிஷ் விமானப்படை தாக்கியிருக்கிறது. ஆர்டிக்கடலில் பிரிட்டிஷ் கடற்படை கப்பல்கள் அநேகம் வந்திருக்கின்றன என்று பின்லாந்து செய்திகள் கூறுகின்றன. வடக்கில் ரஷ்யத் துருப்புகள் பெருவாரியாகச் சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. ஒருமாதத்துக்கு முன்பே எதிரிகளால் பிடிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட முர்மான்சிக் இன்னும் ரஷ்யர்களுடைய கையில்தானிருக்கிறது. லடோகா ஏரியின் அருகில் பெட்ரோசவாட்ஸ்க் பிரதேசத்தில், ஜெர்மன் துருப்புகளும், பின்லாந்து துருப்புகளும் முன்னேறிச் சென்றதாக இதுவரை ஒரு தகவலும் கிடைக்கவில்லை. கரீலியன் ஐ சந்தியைத் தாண்டி பின்லாந்து துருப்புகள் முன்னேறியதாகக் கூறப்படுவது நிலையானதல்ல என்று தெரிகிறது. தென்கிழக்கிலிருந்து முன்னேறி லெனின்கிராடைப் பிடித்து மாஸ்கோவுக்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமல் செய்துவிடவேண்டுமென்பது ஜெர்மானியர்களுடைய நோக்கம். ஆனால், லெனின்கிராடைப் பாதுகாப்பதற்கு வேண்டிய எதுவும் மாஸ்கோவிலிருந்து வரவேண்டிய அவசியமில்லை. எல்லா பாதுகாப்பு ஏற்பாடுகளும் லெனின்கிராடில் பூரணமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. ஜெர்மானியர்களுடைய படை நீண்டதூரம் கஷ்டமான பிரதேசங்களில் இருந்து போர் புரிவது ரஷ்யர்களுக்கு ஒரு அனுகூலமான விஷயம்.

இப்போது ரஷ்யாவில் நடக்கும் யுத்தம் இரண்டு புதிய திக்குகளில் ஜெர்மானியர்களால் திருப்பப்பட்டிருப்பதாக ரஷிய அரசாங்க அறிக்கை கூறுகிறது. அவையாவன: கீவுக்கு வடமேற்கில் உள்ள கோரோஸ்டன், அதற்கு நேர் தெற்கிலுள்ள பயேல்யா—ட்சர்கோவ் என்ற பிரதேசங்கள். ஜெர்மானியர்கள் நேர் முறையாய் கீவைத் தாக்கினார்கள்; அதில் தோல்வியுற்றார்கள். இப்போது கொறடா முனை போல இரண்டு வழியாக கீவைத்தாக்கி, அதைச் சுற்றி வளைத்துக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் முயற்சி செய்கிறார்கள். அப்படிச் சுற்றி வளைத்துக்கொண்டால், ட்நீபருக்கு மேற்கிலும், கீவுக்கு அருகாமையிலுள்ள ரயில்வே பாதைக்கும் கீவுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லாமல் போய்விடும். அந்த ரயில்வேதான் மத்திய ரஷ்யாவையும், யூக்ரெயின் சுரங்கப் பிரதேசங்களையும், நீகொலேவ் என்ற இடத்தைச் சுற்றியுள்ள தானியக் களஞ்சியங்களையும் ஒன்று சேர்த்திருக்கிறது. இந்த ஜெர்மன் முயற்சி கைகூடுமானால் வடக்கு நோக்கி ரயில் பாதை போடப்பட்டிருக்கும் ஒடெஸ்ஸாவும், கீவுக்குச் சம்பந்தப்படாமல் வெட்டப்படும். யூக்ரெயின் மாகாணத்தில், மார்ஷல் பூடென்னி தலைமையின் கீழுள்ள ரஷ்ய ராணுவத்தலைவர்களுக்கு ஜெர்மனியர்களுடைய நோக்கம் நன்றாகத்தெரியும்; அதைத் தடுப்பதற்கு வேண்டிய முன் ஜாக்கிரதையான ஏற்பாடுகளை எல்லாம் அவர்கள் செய்திருக்கிறார்கள். அதனால்தான் நேர்முகமாக யூக்ரெயினின் தலைநகரான கீவை ஜெர்மானியர்கள் தாக்கியபோது அவர்கள் தோல்வியுற்றார்கள்.

ரஷ்யாவின் கடற்படைத் தளமான ஹாங்கோ ஜெர்மானியர்களால் அநேக தடவை வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டும், ஜெர்மானியர்கள் கையில் விழாமல் பாதுகாக்கப்பட்டும் வருகிறது. ஹாங்கோ பாதுகாப்புப் போர் இந்த யுத்தத்தில் நடந்த பெரிய வீரச்சண்டைகளில் ஒன்றாகக்கருதலாம். பால்டிக் கடலில் ஜெர்மன் சண்டைக் கப்பல்கள் தாராளமாகச் செல்வதற்கு, ஹாங்கோ பெருந்தடையாக இருக்கிறது. பால்டிக்கடலிலுள்ள ஜெர்மன் யுத்தக் கப்பல்களையும், வர்த்தகக் கப்பல்களையும் ரஷ்ய ஆகாய விமானங்கள் பலமாகத் தாக்கிவருகின்றன. யுத்த அரங்க முன்னணியில், ஜெர்மன் விமானங்கள் தாக்கப்படுகின்றன.

பின்லாந்து வளைகுடாவில் ஜெர்மானியர்கள் கடல் வெடிகுண்டுகளை சுற்றிலும் போட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால் அவைகள் அவ்வளவு அதிகமாக இல்லை. ரஷ்ய யுத்தக் கப்பல்கள் தாராளமாகப் போய்க்கொண்டிருக்கின்றன. பின்லாந்துக்குப் போகும் ஜெர்மன் ‘கான்வாய்’ கப்பல்களை ரஷ்யக் கப்பல்கள் அடிக்கடி தாக்கிக்கொண்டு வருகின்றன.

## பாஸிசம் ஒழிக்கப்படும்.

ஸ்மோலென்ஸ்க் பகுதியில், ரஷ்யப்படைகள் ஜெர்மானியர்களை நன்றாகத்தாக்கி முறியடித்திருக்கின்றன. 137-வது ஜெர்மன் காலாட்படையும், 253-வது ஜெர்மன் காலாட்படையும் அடியோடு நாசம் செய்யப்பட்டன. ஜெர்மன் பாஸிசத்தை ஒழிக்கப்போகும் பல கடுமையான தாக்குதல்களில் இது முதன்மையானது என்று “பிராவ்தா” என்ற மாஸ்கோ பத்திரிகை கூறுகிறது. “இஸ்வெஸ்டியா” என்ற மற்றொரு ரஷ்யப் பத்திரிகை, ரஷ்யத் துருப்புகள் எதிரியை எப்படி முறியடிப்பது என்பதை அறிந்துகொண்டன என்று குறிப்பிட்டிருக்கிறது.

ஜெர்மனியை எதிர்த்து ரஷ்யா போராடி வருவதை பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் பாராட்டிக்கூறியிருக்கிறார். அவருடைய அந்தரங்க தூதர், மிஸ்டர் ஹாரி ஹாப்கின்ஸ், மாஸ்கோவுக்குப் போயிருந்தபோது, ஸ்டாலினுடன் நீண்டநேரம் பேசியிருக்கிறார். அமெரிக்கா ரஷ்யாவுக்கு எந்த விதங்களில் உதவி செய்யவேண்டும் என்பதைப்பற்றி அவர் பேசியிருப்பார். அமெரிக்க உதவியும் கூடிய சீக்கிரம் ரஷ்யாவுக்குக் கிடைக்குமானால், ரஷ்ய யுத்தத்தின் முடிவைப்பற்றிக் கூறவேண்டிய அவசியமில்லை.

---

# பிரிட்டனில் இருக்கும் இந்தியர்கள் சேவை.

## பிரிட்டிஷ் யுத்தமுயற்சிக்கு ஆதரவு: இந்திய சௌகரிய நிதியின் வேலை.

பிரிட்டனில் தங்கியிருக்கும் இந்தியர்கள், பிரிட்டிஷ் பாதுகாப்பு சேவையில் தாங்களும் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அநேகர் பிரிட்டிஷ் பட்டாளத்தில் சிப்பாய்களாகச் சேர்ந்திருக்கிறார்கள்; பலர் விமான எதிர்ப்பு ‘வார்டன்’களாகவும், விமானத்தீ அணைப்பு கவனிப்பாளர்களாகவும், சேர்ந்திருக்கிறார்கள். ‘பயனீர் கோர்’ என்ற பிரபல படையில் இந்தியப்பட்டாளம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் பல இந்தியர்கள் சேர்ந்திருக்கிறார்கள்.

இந்த இந்தியப்பட்டாளத்தில், கவிவாணர்கள், தத்துவசாஸ்திர ஆராய்ச்சியாளர்கள், தெருக்களில் சாமான் விற்பவர்கள், மூலிகை சரக்கு செய்பவர்கள், சமையற்காரர்கள், தையற்காரர்கள், ஒரு

ரயில்வே 'எஞ்சின் டிரைவர்', ஒரு கழைக் கூத்தாடி, எலி பிடிக்கும் பொறி செய்பவன், விஞ்ஞான சாஸ்திரத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள், முதலியவர்களெல்லோரும் சேர்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஒற்றுமையான கூட்டமாய் பெரிதும் உபயோகமான காரியங்களைச் செய்துவருகிறார்கள்.

ஆறுமாத கால பயிற்சிக்குப் பிறகு லண்டனில் கட்டடங்கள் இடிக்கும் வேலை அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. வெடிகுண்டுகள் விழுந்த தெருக்கள், கட்டடங்கள், முதலியவைகளில் அவர்கள் வேலை செய்தார்கள். சாப்பிடுவதற்காக வரும் ஓய்வுநேரத்தில், உணவருந்திய பிறகு, நடனமாடுவதும், பாட்டுப்பாடுவதுமாக அவர்கள் காலங்கழிப்பார்கள். வழியில் போவார் வருவாரெல்லாம் நடனத்தைப் பார்த்து, பாட்டைக் கேட்டு சந்தோஷப்படுவார்கள். வேலை செய்யும் நேரங்களில், உற்சாகத்தோடும், திறமையோடும் அவர்கள் வேலை செய்துவருவதாகக் கூறப்படுகிறது.

கப்பற்படையைச் சேர்ந்த இந்தியர்கள் பிரிட்டனுக்கு முக்கியமான உதவிபுரிந்து வருகிறார்கள். பிரிட்டிஷ் வர்த்தகக் கப்பற்படையைச் சேர்ந்த ஆட்களில் நான்கில் ஒருபாகம் இந்தியர்கள் தான், பிரிட்டிஷ் தீவுக்கு வேண்டிய சாமான்கள் கொண்டு வருவதற்காக, சப்மரீன், கடல்வெடிகுண்டுகள், இவைகள் நிறைந்த கடலில் தைரியமாகச் சமாளித்து வேலைசெய்து வருகிறார்கள். கடலில் திறமையாக வேலைசெய்து இவர்கள் நற்பேர் வாங்கியிருக்கிறார்கள். எதிரிகள் சுட்டுக்கொண்டே இருக்கும்போது, தைரியமாக முன்னேறி வேலை செய்வதில் இந்தியர்கள் புகழ்பெற்றிருக்கிறார்கள். யுத்தகாலத்தில் கூட, வருஷத்தில் சுமார் 36,000 பேர் பிரிட்டிஷ் துறைமுகங்களில் வந்து இறங்குகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவியை இந்தியக்கப்பலாட்கள் செய்கிறார்கள்.

பாராட்டப்பட்ட சேவை.

பிரிட்டிஷ் யுத்த முயற்சிக்கு இந்தியர்கள் செய்த சேவை மிகுதியாகப் பாராட்டப்பட்டிருக்கிறது. 1939-ம் வருஷம் டிசம்பர் மீ லண்டனில் ஆரம்பிக்கப்பட்ட இந்திய சௌகரிய நிதியிலிருந்து இந்தியத் துருப்புகளுக்கும், இந்திய கப்பலாட்களுக்கும், பணம் செலவிடப்பட்டிருக்கிறது. ஜெர்மனியிலுள்ள இந்தியக் கைதிகளுக்கு, இந்த நிதி ஒவ்வொரு வாரமும் ஒரு உணவுப் 'பார்சல்' அனுப்புகிறது; பிரிட்டனிலுள்ள இந்தியத் துருப்புகளின் சௌகரியத்தைக் கவனிக்கிறது; மழைக்கால உடைகள், பந்து விளையாட்டு சாமான்கள், 'கிராமபோன்' பெட்டிகள், இசைத்தட்டுகள் முதலியவை இந்தியத் துருப்புகளுக்கு வாங்கிக்கொடுக்கப்படுகின்றன. பட்டாளத்திலிருந்து விடுமுறை வாங்கிக்கொண்டு லண்டனுக்கு வரும் இந்தியத் துருப்புகள் சந்தோஷமாக இருப்பதற்கு வேண்டிய சௌகரியங்களை இந்த நிதிசெய்து கொடுக்கிறது.

முக்கியமாக அதனுடைய கவனம் இந்தியக் கப்பலாட்களிடம் தான் செல்லுகின்றது. ஆயிரக்கணக்கான துணி 'பார்சல்'கள் அவர்களுக்கு வினியோகம் செய்யப்படுகின்றன. கப்பலுடைந்த மாலுமிகளின் 'பார்சல்'கள் பத்திரமாக வைக்கப்படுகின்றன. கஷ்டப்படுபவர்களின் குறைகள் பிரத்தியேகமாகக் கவனிக்கப்படுகின்றன. இந்திய மாலுமிகள் லண்டனுக்கு வந்ததும், உடனே தங்கள் 'பார்சல்' களைப் பெற்றுக்கொள்வதற்கு இந்திய சௌகரிய நிதி காரியாலயத்துக்கு விரைந்து செல்வார்கள். இந்த நிதி வெற்றிகரமான வேலையைச் சிறப்பாகச் செய்துவருகிறது.

---

## கிரீட்; ஹிட்லரின் லாப நஷ்டம்.
### மத்திய தரைக்கடலில் பிரிட்டிஷ் பலம்.

பனிரெண்டு நாள் கடுமையான போர் செய்த பிறகு பிரிட்டிஷ் துருப்புகள் கிரீட் தீவை விட்டு விலகி எகிப்துக்குப் போய்ச்சேர்ந்தன. கிரீட்டில் நடந்த போரின் முடிவு திருப்திகரமாய் இல்லாவிட்டாலும், கிரீட்டை விட்டு விலக முடிவு செய்தது சரியான முடிவு தான். கிரீட்டுக்காக ஒரு மதிப்பிட்ட விலையைக் கொடுக்கலாம்; மதிப்புக்குமேல் போன பிறகு அதை விட்டுவிடவேண்டியதாய்விட்டது, என்ற ராணுவ அபிப்பிராயம் நிலைமையை நன்றாய் விளக்குகிறது.

ஜெர்மன் துருப்புகள் கிரீட்டில் விமானங்கள் மூலமாக இறங்குவதைப் பிரிட்டிஷாரால் தடுக்கமுடியவில்லை. கிரீஸ் தேசத்திலும், ஈஜியன் தீவுகளிலும் ஜெர்மன் ஆகாய விமான தளங்கள் இருந்ததுதான் அதற்குக் காரணம். அங்கிருந்து ஜெர்மன் துருப்புகள் விமானங்கள் மூலமாக வந்துகொண்டேயிருந்தன. கிரீட்டிலிருந்த பிரிட்டிஷ் துருப்புகளுக்கு வேண்டிய உதவி வெளியிலிருந்து யுத்தம் நடக்கும் தீவுக்கு அனுப்புவதற்குச் சௌகரியமில்லாமற் போய்விட்டது. ஜெர்மன் விமானங்களுக்கு 150 மைல் தூரத்தில் விமானத் தளம் இருந்தது; பிரிட்டிஷ் விமானங்கள் 300 அல்லது 400 மைலுக்கப்பால் எகிப்தில் உள்ள விமானத்தளங்களிலிருந்து வந்து போய்க்கொண்டிருக்கும்படியாய் இருந்தது.

கிரீட்டிலிருந்து பிரிட்டிஷ் துருப்புகள் விலகிய போதிலும், நெருங்கிய கிழக்கரங்கத்தில் ஹிட்லருடைய நோக்கம் நிறைவேறவில்லை. கிரீட் யுத்தத்தில், ஜெர்மன் துருப்புகள், விமானங்கள், பெட்ரோல் ஏராளமாக உபயோகிக்கப்பட்டன. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகள் ஹிட்லருடைய தாக்கும் விமானங்கள் 660-ஐ நாசம் செய்துவிட்டன; ஹிட்லருடைய திறமையான துருப்புகளில் 18,000 பேர் கிரீட்டில் உயிரிழந்தார்கள். யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு எல்லா மாதாகோவில்களிலும் யுத்தம் முடியும் வரை, பிரத்தியேகமான பிரார்த்தனைகள் நடத்தும்படி ஜெர்மனியில் உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஜெர்மன் மக்களுக்கு மறைமுகமாகத் தைரியம் கொடுப்பதற்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

கிரீட்டை இழந்ததால், மத்தியதரைக் கடலில், பிரிட்டிஷ் கடற்படையின் பலம் பாதிக்கப்படவில்லை. 15,000 பேர் எதிரிகளுடைய தாக்குதல்களுக்கிடையே எகிப்துக்குச் சென்றது ஒரு பெரிய காரியம். கிரீட்டை இழந்தது ஒரு முக்கியமான நஷ்டமென்றாலும், கிரீட் யுத்தத்தில் கற்றுக்கொண்ட படிப்பினைகள் இனிமேல் மிகவும் உபயோகமாயிருக்கும் என்பது ஒரு கவனிக்கத்தக்க விஷயம்.

---

# வாரச் செய்திக் குறிப்புகள்.


### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும், ஆகாய விமானப் போர்.

பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை, ஜெர்மனியில் போலி ஜெர்மன் உடைதிட்ட கார்டுகளைப் போடுகின்றதென்று ஜெர்மன் பத்திரிகையாகிய 'ஹாம்பர்க்கர் பிரிடென்ப்ளாட்' கூறுகிறது. இந்தப் போலி கார்டுகளை உபயோகிப்பவர்களுக்கு ஜெர்மனியில் நீண்டகால சிறைவாசம் அல்லது மரண தண்டனை விதிக்கப்படும் என்று அந்த பத்திரிகை கூறுகிறது. ஜெர்மன் போலி மாமிச டிக்கட்டுகளும், பிரிட்டிஷார் ஆகாய விமானங்கள் மூலமாக ஜெர்மனியில் போடுவதாக 'டைடாட்' பத்திரிகையின் பெர்லின் நிருபர் தெரிவிக்கின்றார்.

விடியற்காலையில் வீதிகளில் நடந்து சென்றுகொண்டிருந்த ஜெர்மன் மக்கள் அதிக ஆவலுடன் இந்தப் போலி டிக்கட்டுகளை எடுத்துக்கொண்டார்களாம். இதற்குமுன் பெட்ரோல் போலி டிக்கட்டுகளைப் போட்டபோது அவைகளை உபயோகித்த பலர் கைதியாக்கப்பட்டனர். பெட்ரோல் சப்ளைசெய்யும் இடங்களில் கடுமையான கட்டுதிட்டம் செய்யப்பட்டது. இந்த பிரிட்டிஷ் போலி டிக்கட்டுகளுக்கும் ஜெர்மனி அனுமதி டிக்கட்டுகளுக்கும், உள்ள வித்தியாசம் சாதாரண ஜெர்மன் மக்கள் கண்டுபிடிக்க முடியாத அவ்வளவு சாமர்த்தியமாக அவை செய்யப்பட்டிருக்கின்றனவாம்.

பிரிட்டிஷ் ஆகாய மந்திரி அறிக்கை பின்வருமாறு கூறுகிறது: வடமேற்கு ஜெர்மனியில்

## பிரிட்டிஷ் இந்தியப்படை மேற்குப் பாலைவனத்துக்குச் செல்லும் காட்சி.



இந்திய துப்பாக்கிப் படையைச் சேர்ந்த, பிரன் துப்பாக்கிகொண்டுபோகும் ஒரு படை மேற்குப் பாலைவனத்துக்குப்போகும் வழியில் கப்பலினின்றும் இறக்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

ஹெலிகோ லண்டிலுள்ள அநேக சிறு கப்பல்கள் பிரிட்டிஷ் விமான வெடிகுண்டுப் படையால் தாக்கப்பட்டன. 1,200 டன் எடையுள்ள ஒரு கப்பல் முழுகடிக்கப்பட்டது. 1,500 டன் எடையுள்ள மற்றொரு கப்பல் மூழ்கிக்கொண்டிருந்தது. இந்த பகல் தாக்குதல்களில் 7 பிரிட்டிஷ் விமானங்கள் இழக்கப்பட்டன. இரவுத் தாக்குதலில் பிரிட்டிஷ் விமானப் படை, கடுமையான இடிப் புயல் காற்றிலும், மிகவும் அதிகமான மழை தாங்கிய மேகங்களிலும், பறந்துசென்று மேற்கு ஜெர்மனியில், கைத்தொழில் லட்சியங்களாகிய ஆஆச்சன், கொலோன், பொலோன் கப்பற்சாலைகள், ஆகியவற்றின் மீது குண்டுகளைப் போட்டுத் தாக்கின. மூன்று பிரிட்டிஷ் விமானங்கள் இழக்கப்பட்டன. ரீச்சுப் பிரதேசத்தில், மேற்கு ஜெர்மனியில் பிரிட்டிஷ் விமானப் படை அநேக குண்டுகளைப் போட்டதாக ஜெர்மன் சமாச்சார ஸ்தாபனம் கூறுகிறது.

பெர்லினிருந்து (ஜெர்மனி) 'லுப்தான்ஸா' ஆகாயக் கப்பலில் வந்து லிஸ்பனில் (போர்ச்சுகல்) இறங்கிய ஒரு பிரயாணி பின் வருமாறு தெரிவித்தாக லண்டன் டெய்லி மெயில் பத்திரிகை கூறுகிறது:—

"பெர்லின் ஒரு அழுமூஞ்சிப் பட்டணம். அங்கே சிரித்த முகத்தையே காணமுடியாது. அவர்கள் சிறிக்காமல் முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டிருப்பதற்குக் காரணம் ரஷ்யாவில் ஹிட்லரின் முயற்சி எங்கு பாழாய்ப் போய்விடுகின்றதோ என்பதே. ரஷ்ய யுத்தம் ஆரம்பித்த பிறகு பெர்லின் தெருக்களில் ஹிட்லர் படையைச்சேர்ந்த காவலாளிகள் தவிர வேறு வாலிபர்களைக் காணமுடியாது, ரஷ்ய யுத்தத்திற்கு முன்பு ஒவ்வொரு நாளும் பெர்லினிலிருந்து வட கிழக்குப் பக்கம், தொடர்ச்சியாக விமான எதிர்ப்புப் பீரங்கிகள் போய்க்கொண்டிருந்தன: விமான தாக்குதல்களினுல் பெர்லின் கட்டடங்களை மறைக்கும் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. உருளைக்கிழங்கோ அல்லது மற்ற காய்கறி வகைகளோ, பெர்லினில் கிடைத்துப் பல வாரங்கள் ஆகிவிட்டன."

இந்த வருஷத்தின் முதல் 7 மாதங்களில், பிரிட்டன் மாத்திரம், அச்சு தேச விமானங்களை அழித்தது 2,500-க்கு மேலிருக்கும். இதில் 433 விமானங்கள் ஜூலை மாதத்தில் வீழ்த்தப்பட்டன. அதேமாதத்தில் 308 பிரிட்டிஷ்விமானங்கள் இழக்கப்பட்டன.

சென்ற சனிக்கிழமை பெர்லின் நகரம் பலமாகத் தாக்கப்பட்டது. ஹாம்பர்க், கீல் துறைமுகங்களும் தாக்கப்பட்டன. மேற்கு ஜெர்மனிமீதும், வடக்கு ஜெர்மனிமேலும் பிரிட்டிஷ் ஆகாய விமானங்கள் பறந்தனவென்றும், சில விமானங்கள் பெர்லினில் சில குண்டுகளைப் போட்டனவென்றும் பெர்லின் ரேடியோ கூறுகின்றது.

வட கடலில் மப்பு மந்தாரமா யிருந்தபோதிலும், மத்திய ஜெர்மனியில் ஆகாயம் சுத்தமாயிருந்தது. சந்திரன் அஸ்தமித்துக்கொண்டிருந்தது. பிரிட்டிஷ் விமானப்படை பெர்லின் நகரத்தை எல்லா திசைகளிலிருந்தும் தாக்கின. முதல் குண்டு விழுந்ததும் விமான எதிர்ப்பு பீரங்கிகள் சுட ஆரம்பித்தன.

பெர்லின், தூரதிருஷ்டி விளக்குகளை (சர்ச் லைட்ஸ்) அதிகப்படுத்தியிருக்கின்றன. பெர்லினுக்கு 30 மைல் தூரத்திலிருக்கும்போதே பிரிட்டிஷ் விமான ஓட்டிக்கு அந்த விளக்குகளின் வெளிச்சம் தெரிந்ததாம். அருகில் வந்ததும் அந்த விளக்குகள் சுமார் 300 இருக்கும் என்று நிர்ணயிக்கப்பட்டது. அந்த விளக்கு வெளிச்சங்களின் இடையில் சென்று சுமார் இரவு 1-30 மணிக்கு பெர்லினுக்கு அருகே பிரிட்டிஷ் விமானங்கள் போய்ச் சேர்ந்து 1–54 மணிக்கு குண்டுகளைப்போட்டன. பெர்லினின் மேற்கு பாகத்தில் பல தீக்குண்டுகள் பெருவாரியாக போடப்பட்டன. 80 மைல் தூரத்தில் அந்த நகரம் சிகப்புக் கொழுந்து விட்டு எறிந்துகொண்டிருந்தது தெரிந்தது.

ஹாம்பர்க்கும், பெர்லினைப்போல் கடுமையாகத் தாக்கப்பட்டது. கப்பற்சாலைகளுக்கும், ரயில்வேக்களுக்கும், கைத்தொழிற்சாலைகளுக்கும் பெருத்த சேதம் உண்டாக்கப்பட்டது. கீல் பட்டணத்தின் கப்பற்சாலைகளும் பலமாகத் தாக்கப்பட்டன. கைத்தொழில் நகரமாயிருப்பதுடன், ஜெர்மன் ரயில்வேக்களுக்கு மத்திய நகரமாயுமுள்ள பெர்லின் இதுவரையில் சுமார் 50 தடவைகள் தாக்கப்பட்டிருக்கின்றது.

வடக்கு ஜெர்மனியில் ஹனேவர் பட்டணமும், மேற்கு ஜெர்மனியில் உள்ள பிராங்பர்ட்—ஆன்—மெயின் பட்டணமும் பிரிட்டிஷ் ஆகாய விமானப் படையால் தாக்கப்பட்டது. பிரான்சின் வட கோடி

14504

யிலுள்ள கலே பட்டணமும் தாக்கப்பட்டது. மேற்கு ஜெர்மனியில் ரூர், ரைன்லண்டுப் பிரதேசங்களும் தாக்கப்பட்டன.

வட ஸ்காண்டிநேவியாவில் கிர்கனிஸ், பெட்ஸாமோ துறைமுகங்களிலிருந்த ஜெர்மன் கப்பல்கள் மீது பிரிட்டிஷ் விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன என்று கடற்படை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். பெட்ஸாமோ துறைமுகத்தில் ஒரு சாமான் கிடங்கும், எண்ணெய் டாங்கியும் தீப்பிடித்து எரிந்தன. கிர்கினிஸ் துறை முகத்தில் நான்கு எதிரி சப்ளை கப்பல்களுக்குச் சேதம் உண்டாயிருக்குமென்று தெரிகிறது.

பிரிட்டனில் கிழக்கு, தென் மேற்குப்பாகங்களில் ஜெர்மன் விமானப்படை குண்டுகளைப் போட்டன. கொஞ்சம் பொருள் சேதம் ; உயிர்ச்சேதமொன்றுமில்லை என்று தெரிகிறது. யார்மத், பிளிமத் துறைமுகங்கள் தாக்கப்பட்டன என்று ஜெர்மன் அறிக்கை கூறியது சரியல்ல ; லண்டனில் 40 மைல் சுற்றளவுக்குள் ஒரு குண்டு கூட விழவில்லை என்று ஸ்திரமாக அறிவிக்கப்படுகின்றது. உயிர்ச்சேத மொன்றுமில்லை. சில தந்தி கம்பிகளுக்கு மாத்திரம் சேதம் உண்டாயிற்று.

இங்கிலாந்தில் கிழக்கிலும், வடகிழக்கிலும் ஸ்காட்லண்டிலும் விரோதி விமானங்கள் வெடிகுண்டுகளைப் போட்டன. இதனால் வடகிழக்கு இங்கிலாந்தில் சில வீடுகள் சேதம் அடைந்தன ; சிலர் இறந்தனர்.

### 2. ஆப்பிரிக்காவும், மத்தியதரைக் கடலும்.

டொப்ரூக்கிற்குத் தென் கிழக்கில் விரோதிகள் தாக்கியபோது பீரங்கிக் குண்டுகளினால் விரட்டியடிக்கப்பட்டார்கள். காயமடைந்த ஒருவனை விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள். எல்லைப்புறத்தில் ஒரு இத்தாலிய யுத்த விமானம் கெட்டு கீழிறங்கிற்று. இத்தாலிய விமான ஓட்டி சரணடைந்தார் என ஒரு உத்தியோக பூர்வமான அறிக்கை கூறுகிறது.

ஈஜிப்டிலுள்ள நைல் நதி டெல்டாவின் மேல் சில குண்டுகள் போடப்பட்டனவென்றும், பொருள் சேதமொன்றுமில்லை என்றும், ஒருவர் இறந்தார், மற்றொருவருக்குக் காயம் என்றும், ஈஜிப்ட் உள் நாட்டு மந்திரி அறிக்கை தெரிவிக்கின்றது.

சிடி ஓமருக்கு அருகில் உள்ள விரோதி மோட்டார் போக்குவரத்து இடங்களின்மேல் பிரிட்டிஷ் விமானப்படை குண்டுகளைப் போட்டன. பெங்காசி துறைமுகமும் தாக்கப்பட்டது. அங்குள்ள விமான எதிர்ப்புப் பீரங்கிகள் மேலும், பெர்க்கா ஆகாய விமான தளத்திலுள்ள தூரதிருஷ்டி விளக்குகள் மேலும் குண்டுகள் போடப்பட்டன. காம்பட் ஆகாய தளம், மிசூராட்டா இடங்களும் தாக்கப்பட்டன.

மேற்கு மத்தியதரைக் கடலில் இத்தாலியைச் சேர்ந்த சார்டீனியா தீவில், எல்மாஸிலுள்ள, ஆகாய கடல் விமான தளங்களை முதன் முதலாக பிரிட்டிஷ் விமானப்படை தாக்கியதில் விரோதி விமானங்கள் பெருத்த சேதம் அடைந்தன. ஐந்து வெடிகுண்டு விரோதி விமானங்களும், கடல்-விமானங்களும் தீப்பிடித்து எறிந்துவிட்டன. மற்றவைகளில் பல சேதமடைந்தன.

பாலெர்மோ, மெஸ்ஸீனா, பெங்காசி பிரிட்டிஷ் விமானப் படையால் தாக்கப்பட்டனவென்று ஒரு இத்தாலிய அறிக்கை கூறுகின்றது.

கஸாலா, பார்டியா, டிரிபோலிடானியா, ஆகியவற்றின் மீது குண்டுகள் போட்டுத் தாக்கி, பத்திரமாக பிரிட்டிஷ் விமானங்கள் திரும்பி வந்து சேர்ந்தன என்று ஒரு பிரிட்டிஷ் விமானப்படை அறிக்கை தெரிவிக்கின்றது.

சூயஸ் கால்வாய் பிரதேசத்தில் விரோதிகள் குண்டுகளைப் போட்டுத் தாக்கியதில் 58 பேர் காயமடைந்தனர், 17 பேர் இறந்தனர். பொருள் சேதமும் சிறிது உண்டாயிற்று என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக்கடலும்.

‘ தூதிலா ’ என்ற அமெரிக்க பீரங்கிக் கப்பல் மேல், சுங்கிங்கைத் தாக்கும்போது, குண்டுகளைப் போட்டதற்கு, ஜப்பான், அமெரிக்காவை மன்னிப்பு கேட்கின்றது. அமெரிக்க ஸ்தானீகராகிய மிஸ்டர் ஜோஸப் க்ரூ அமெரிக்காவிலுள்ள ஜப்பானிய காரியாலயத்திற்குச் சென்றபோது ஜப்பான் மன்னிப்பு கேட்பதாகத் தெரிவிக்கப்பட்டது. மிஸ்டர் சம்னர் வெல்ஸுக்கு ஜப்பானின் மன்னிப்பு திருப்தியளிக்கவில்லை. அமெரிக்கா இந்த விஷயத்தில் இன்னும் ஒரு முடிவிற்கு வரவில்லை என்று தெரிகிறது.

அமெரிக்க யுத்த இலாகா 16,346,840 டாலர் பெறுமான யுத்த சப்ளைகள் செய்யவேண்டுமென்று கானடாவிலுள்ள கைத்தொழில்காரர்களுக்கு ஆர்டர் கொடுத்திருக்கின்றது.

வெற்றிக்கு அறிகுறியாகிய ‘ வி ’ ஸ்டாம்புகள் (தபால் தலைகள்) இப்போது, முதல் 10 லக்ஷம் உபயோகத்திற்குத் தயாராயிருக்கின்றன. பிரிட்டிஷ் அமெரிக்க ஆம்புலன்ஸ் படையின் முயற்சியால் இந்த ‘ வி ’ ஸ்டாம்புகள் தயாரிக்கப்பட்டன. ஒரு ஸ்டாம்பின் விலை 2 செண்டுகள். இந்த பணம் பிரிட்டன் யுத்த நிதிக்குக் கொடுக்கப்படும் என்று தெரிகிறது.

அமெரிக்க பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டிற்கு அமெரிக்க யுத்த கமிட்டி, அதிக அதிகாரம் கொடுத்திருக்கின்றது. இதனால் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் வேண்டிய யுத்த தளவாடங்களைச் செய்துகொள்ள உத்திரவு பிறப்பிக்கலாமென்று தெரிகிறது.

அமெரிக்காவில் பெட்ரோல் குறைப்புத் திட்டம் அமுலிலிருக்கின்றது. ஆகஸ்டுமீ 3உயிலிருந்து மாலை 7-மணியிலிருந்து காலை 7-மணி வரைக்கும், அமெரிக்காவிலுள்ள ஒரு லக்ஷம் பெட்ரோல் சப்ளை ‘ பங்கு ’ களை மூடிவைக்க வேண்டுமென்று, அமெரிக்க உள்நாட்டு மந்திரியாகிய மிஸ்டர் ஐக்ஸ் உத்திரவிட்டிருக்கின்றார்.

முன்பு கிரீஸில் அமெரிக்க மந்திரியாக இருந்த மிஸ்டர் லின்கன் மாக்வீயை, இப்போது ஐஸ்லாந்து மந்திரியாக பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் நியமித்திருக்கின்றார்.

ஜப்பான், தன்னுடைய யுத்தத்திற்கு இது வரையில் பெருவாரியாக அமெரிக்க பெட்ரோலியம் எண்ணெயையே உபயோகித்து வந்தது. இப்போது பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட், மோட்டார் சம்பந்தமான பெட்ரோல் முதலிய எண்ணெய்களெல்லாவற்றிற்கும், பிரிட்டிஷ் சாம்ராஜ்ய தேசங்களும் நாஸிஸத்தை எதிர்க்கும் மற்ற தேசங்களும் தவிர்த்து, வேறெங்கும் ஏற்றுமதி செய்யக் கூடாதென்ற தடை உத்திரவு பிரப்பித்திருப்பதால், ஜப்பான் பெரிதும் பாதிக்கப்படும். சீன வெளிநாட்டு மந்திரியாகிய கோ டாய்-ச்சி ஜப்பானுக்கு மோட்டார் சம்பந்தமான பெட்ரோல் முதலிய எண்ணெய் வகைகளின் ஏற்றுமதியைத் தடை செய்திருக்கும் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டின் அறிக்கையை, தான் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்பதாக ராய்ட்டர் நிருபரிடம் தெரிவித்தார்.

லண்டன் ‘ டெய்லி டெலிகிராப் ’ பத்திரிகையின் நியூயார்க் நிருபர் பின்வருமாறு செய்தி அனுப்பியிருக்கின்றார்—

“ சென்ற மாதத்தில் பிரிட்டன் அட்லாண்டிக் யுத்தத்தைத் தனக்கு அனுகூலமாக்கிக் கொண்டது என்று கடல் யுத்த நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இதற்கு மூன்று முக்கிய காரணங்களிருக்கின்றன. அவையாவன,

1. நாஸி ஆக்கிரமிப்பிலுள்ள கடல் தளங்கள், ஆகாய விமான தளங்கள், மீது வெற்றிகரமான முறையில் குண்டுகள் போட்டுத் தாக்கியதில் விரோதி சப்மரீன்களும், வெடி குண்டு விமானங்களும், பிரிட்டிஷ் கப்பல் நிலைமையைப் பாதிக்காமற் செய்தது.

2. ரஷ்ய-ஜெர்மன் யுத்தம்—இதனால் ‘ லுப்ட்வாப் ’ (ஜெர்மன் ஆகாயப்படை) பிரிட்டிஷ் துறைமுகங்களின் மேலும், கப்பல்களின் மேலும் குண்டுகள் போட்டுக் கொண்டே இருக்க முடியாமற் போனது.

3. அமெரிக்க நடுநிலைமை வேவுகாரர்கள் வேலை செய்ததில், பிரிட்டிஷ் கடற்படையின் மீதிருந்த பாரம் குறைந்தது.

மிஸ்டர் சர்ச்சில் அட்லாண்டிக் கடல் கடந்து கனடாவில் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டைச் சந்தித்து, யுத்த நிலைமையைக் குறித்து, பேசியதாகக் கூறப்படுகிறது.

### 4. கிரீசும், இத்தாலியும்.

கன்டானியா, சிசிலி, ரெக்கியோ, ஆகாய விமான தளங்கள் பிரிட்டிஷ் விமானப் படையால் தாக்கப்பட்டன. மாச்சி—100 நெ விமானங்கள் தரை மீதிருக்கும்போதே குண்டுகள்பட்டுப் பல சேதமடைந்தன. பிரிட்டிஷ் விமானங்களெல்லாம் குண்டுகளைப் போட்டு பத்திரமாகத் திரும்பி வந்தன.

அட்லாண்டிக் கடலில் வேலைசெய்துகொண்டிருந்த இத்தாலிய சப்மரீன் (நீர் மூழ்கிக் கப்பல்) திரும்பி வரவில்லை, என்று ஒரு இத்தாலிய அறிக்கை கூறுகின்றது.

### 5. பால்கன்ஸ், சிரியா, இரான் முதலியன.

சிரியாவிலுள்ள விஷி துருப்புகள் யுத்த தண்டு தளவாடங்களை நேசதேசத் துருப்புகளுக்குக் கொடுத்து விட்டன என்று ஒரு அறிக்கை கூறுகின்றது. விஷி சர்க்கார் சிரியாவை விட்டுப் போனபிறகு சிரியாவிலும் லிபானனிலும், புதிய சர்க்கார் அமைப்பதைப்பற்றி அரசியல் நிபுணர்கள் பலர் கலந்து ஆலோசித்து வருகின்றனர். புதிய சர்க்கார் ஆட்சி ஏற்படும் வரைக்கும் ஜெனரல் டீகால் தெரிவித்தபடி நேசதேசக் கக்ஷியின் கொள்கைப்படியே சர்க்கார் நடந்துவரும்.

இரானில் ஒரு பெரிய ஜெர்மன் ஐந்தாம்படை இருக்கின்றது. அது ரஷ்யாவிற்கு விரோதமாகப் பிரசாரம் செய்து வருகிறது. இந்த ஜெர்மன் கங்காணிகள் வெள்ளை ரஷ்யர்களுடன் சேர்ந்து வேலை செய்வதாகத் தெரிகிறது. ரஷ்யாவும், பிரிட்டனும் ஈரானிய சர்க்காருக்கு இவ்விஷயத்தில் எச்சரிக்கை செய்திருக்கின்றது. ஈரானில் சில குறிப்பிடப்படட ஜெர்மானியர்கள் இருப்பதாகவும், அவர்கள் சர்க்காரால் கவனிக்கப்பட்டு வருகிறார்களென்றும், ஈரான் சர்க்கார் பிரிட்டனுக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

ஈரான் நடுநிலைமை வகிக்கத் தீர்மானித்து விட்டதாக அதிகார பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது. நாஜி கங்காணிகள் ஈரானிலிருப்பதைப்பற்றி கூறுகையில் அமைதியும், சமாதானமும் நிலவுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் சர்க்கார் செய்துவருவதாகத் தெரிவித்தனர்.

பாரசீக வளைகுடாவில் நங்கூரம் போட்டிருக்கும் நான்கு ஜெர்மன் கப்பல்கள், இந்து மகாசமுத்திரத்திற்குள் நழுவிப்போய் இந்திய, அராபிய கடற்கரையிலுள்ள பிரிட்டிஷ் கப்பல்களை எதிர்ப்பதற்கு உபயோகப்படுத்தப்படுமென்று, நேஷனல் ஒலிபரப்பு கம்பெனியின் அங்கார நிருபராகிய மார்டின் அக்ரான்ஸ்கி கூறியிருப்பது ஆதாரமற்றதென்று, கராச்சியிலுள்ள ஈரான ஸ்தானிகர் தெரிவிக்கின்றார்.

ஈரானிலுள்ள ஜெர்மன் கைத்தொழில் நிபுணர்கள் துருக்கிக்குப் போயிருக்கின்றனர். மற்றும் பல ஜெர்மனியர்கள் ஈரானை விட்டுப் புறப்படுவார்களென்று தெரியவருகின்றது.

### 6. கப்பல் நிலைமை.

அமெரிக்காவில் கப்பல் கட்டும் வேலை அதிக துரிதமாக நடைபெற்று வருகிறது என்று அமெரிக்கக் கப்பற்படை இலாகா கூறுகிறது. போனவருஷம் ஜூலை மாதம் 12 கப்பல் கட்டும் சாலைகள் இருந்தன. இந்த வருஷம் ஜூலை மாதம் 1-ந் தேதி 109 கப்பல் கட்டும் சாலைகள் வேலை செய்கின்றன.

அட்லாண்டிக் கடலிலிருந்து பிரிட்டனுக்கு "காண்வாய்" கப்பல்கள் வந்து சேர்ந்தன. இதுவரையில் அவ்வளவு அதிகமான கப்பல்கள் ஒரே "காண்வாயில்" அட்லாண்டிக் கடலைத்தாண்டி, பிரிட்டனுக்கு வந்து சேர்ந்ததில்லையாம். கனடாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் ஏராளமான யுத்த சாமான்களும், வெடி குண்டு சாமான்களும் கப்பல்களில் கொண்டுவரப்பட்டன. பிரிட்டிஷ் விமானப் படையில் சேருவதற்கு அநேக அமெரிக்கர்களும், ஆஸ்பத்திரி வேலையிலும், முதல் உதவி வைத்திய சிகிச்சை வேலையிலும் சேருவதற்காக டாக்டர்களும், செவிலித்தாய்களும், அநேக கப்பல்களில் வந்து சேர்ந்தார்கள்.

'பிராங்பர்ட்' என்ற 5,529 டன் எடையுள்ள ஜெர்மன் கப்பல், பிரிட்டிஷ் கடற் பாதுகாப்பு முற்றுகையை உடைத்துக்கொண்டு தப்பிச்செல்ல முயற்சி செய்தது. ஆனால் பிரிடிஷ் கப்பல்களால் கண்டுபிடிக்க பட்டு தடைப்படுத்தப்பட்டது. சில மாதகாலமாக இக்கப்பல் எங்கே இருக்கிறது என்று தெரியாமல் இருந்தது.

### 7. தூரக் கிழக்கு அரங்கம்.

ஜப்பான் தாய்லாந்தைப் பயமுறுத்தி வருவதைப் பற்றி அமெரிக்கா யோசனை செய்து வருகிறது. தாய்லாந்தின் ஸ்தானீகர், அமெரிக்கா அரசியல் மந்திரியான மிஸ்டர் கார்டல் ஹல்லை வாஷிங்டனில் கண்டு பேசினார்.

ஹாங்கோவுக்கருகில் சீனத் துருப்புகள் ஒரு ஜப்பானியப்படையை அடியோடு அழித்துவிட்டது. அமெரிக்காவின் உதவியும், ரஷ்யாவின் உதவியும், சீனாவுக்கு வந்து சேர்ந்திருக்கின்றன. சீனாவின் ராணுவ பலம் அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஜப்பானியத் துருப்புகள் மஞ்சூகுவோவுக்கு அதிகமாக அனுப்பப்படுகின்றன. ஜப்பான் ரஷ்யாவைத் தாக்குவதற்காக இம்மதிரி செய்கிறது என்று சிலர் கூறுகிறார்கள். மத்திய சீனாவிலிருந்து ஜப்பானியத் துருப்புகள் அழைக்கப்பட்டு கிழக்கு சைபீரியா பிரதேசத்துக்கருகில் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தாய்லாந்தை ஜப்பான் அதிக்கிரமித்தால், தங்களுடைய உரிமைகள் பாதிக்கப்படுமென்று, பிரிட்டனும், அமெரிக்காவும் ஜப்பானை எச்சரிக்கை செய்திருக்கின்றன.

பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி, மிஸ்டர் ஈடன், தாய்லாந்தின் சுதந்தரத்தை ஜப்பான் அழிக்க முயன்றால், சிங்கப்பூரின் பாதுகாப்பைத்தாக்க முயலுவதாகக் கருதப்படும், என்று பார்லிமெண்டில் கூறினார்.

ஜப்பான் தாய்லாந்தில் பிரவேசித்தால், பசிபிக் கடலிலுள்ள அமெரிக்கப் பிரதேசங்களைப் பயமுறுத்துவதாகக் கருதப்படும் என்று, அமெரிக்க அரசியல் மந்திரி மிஸ்டர் கார்டெல்ஹல் கூறினார்.

தூரக்கிழக்கரங்க யுத்த நிலைமையைப்பற்றி இவ்விதழில் வெளியாகும் ஒரு கட்டுரையில் முழு விவரங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### 8. விஷி.

தூரக்கிழக்கரங்கத்தில் உள்ள நிலைமையைப்பற்றி விஷி அரசாங்கத்தின் முதல் மந்திரி மார்ஷல் பீத்தான், அமெரிக்க ஸ்தானீகர் அட்மிரல் லீகியிடம் பேசினார்.

இண்டோ-சீனாவில் உள்ள யுத்த தளங்களை ஜப்பானுக்குக் கொடுத்ததற்காக, அமெரிக்க அரசாங்கம் விஷி அரசாங்கத்தை எச்சரிக்கை செய்திருக்கிறது.

விஷியும், ஜெர்மனியும் வடக்காப்பிரிக்கா யுத்தத்தில் ஒருவருக்கொருவர் உதவி செய்யவேண்டுமென்று ஜெர்மனி விஷியைக் கேட்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

### 9. ஜெர்மனி அதிக்கிரமித்த நாடுகள்.

நார்வே நாட்டுக்கு ஜெர்மன் அதிகாரியாக நியமிக்கப்பட்டிருப்பவர், நார்வேயில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருப்பதாகப் பிரகடனம் செய்திருக்கிறார். இதன்கீழ் குறிப்பிட்ட ஜில்லாக்களிலாவது அல்லது நாடு முழுவதிலுமாவது, ராணுவச் சட்டம் அனுசரிக்கப்படும் என்று அவர் நினைத்தபோது உத்தரவிடலாம். கருப்புடைப்பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களும், போலீஸ் தலைவர்களும் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்காக எப்படிப்பட்ட நடவடிக்கைகளும் எடுக்கலாமென்றும், நார்வேயில் இப்போதிருக்கும் சட்டங்களும், விதிகளும் அவர்களைக் கட்டுப்படுத்தாதென்றும், அவருடைய பிரகடனம் கூறுகிறது. பொது அமைதி, பொருளாதார வாழ்க்கை, தொழிலாளர்களுடைய நிலைமை, முதலியவற்றைக் குலைப்பதற்கு யாராவது முயற்சி செய்வார்களானால், அவர்கள் ராணுவக் கோர்ட்டால் தண்டிக்கப்படுவார்கள். அந்தக் கோர்ட்டு, மரண

தண்டனை, ஆயுட்காலக் கடுங்காவல், 10 வருஷத்திற்கு மேற்பட்ட சிறைத் தண்டனை, கைதியின் சொத்துப் பறிமுதல் முதலிய எந்த தண்டனையும் விதிக்கலாம்.

நார்வேயின் ஜெர்மன் அதிகாரியின் அனுமதியின்மேல், ஜெர்மன் போலீஸ் அதிகாரிகள் நாட்டு மக்களிடமுள்ள 'ரேடியோ' பெட்டிகளை தங்களிடம் ஒப்பித்துவிடும்படி அவர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகஸ்ட்டுமீ 7௳ மாலை 6-மணிக்குள், நார்வேயின் மேற்கு, தெற்கு, கிழக்குக்கரையோரப் பிரதேசங்களில் உள்ள 'ரேடியோ' பெட்டிகளெல்லாம் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டும். நார்வேயிலுள்ள ஜெர்மானியர்களை இந்த உத்தரவு பாதிக்காது. இம்மாதிரியான உத்தரவுகளுக்குக் காரணம் பலவிதமாய்ச் சொல்லப்படுகிறது. நார்வே நாட்டு மக்கள் ஜெர்மானியர்களின் ஆட்சியை வெறுக்கிருர்களென்றும், தங்களுடைய வெறுப்பை ஜெர்மானியர்கள் மேலும், அவர்களுடைய யுத்த ஏற்பாடுகள் மேலும் காட்டுகிருர்களென்றும் ஸ்டாக்கோமிலிருந்துவந்த ஒரு செய்தி கூறுகிறது. ஜெர்மானியர்களின் புதிய உத்தரவுகள் நார்வே நாட்டு மக்களின் வெறுப்பினுல் நேரக்கூடிய விளைவுகளைத் தடுப்பதற்காகத்தான் என்று சொல்லப்படுகிறது. நார்வேயின் கரையோரப் பிரதேசங்களில் ஜெர்மன் ராணுவ முஸ்தீப்பு ஏற்பாடுகள் அதிவிரைவாக நடப்பதாகத் தெரிகிறது.

நார்வேயின் மேற்கு ஜில்லாக்களில் இருந்த நார்வீஜியர்கள் திடீரென்று ரகசியமாக வெளியேற்றப்பட்டார்கள். இதனுல் நாட்டு மக்களிடையே பயமும் குழப்பமும் அதிகரித்திருக்கிறது. குஸ்லிங்கின் கட்சியைச் சேர்ந்த நாட்டுத் துரோகிகள்கூட ஜெர்மானியர்கள் செய்கையை ஆட்சேபிக்கிருர்கள் என்று நார்வீஜியன் தந்திச் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது. பர்ஜென் ஜில்லாவிலும், அதன் அருகிலுள்ள ஹோர்தாலாந்து ஜில்லாவிலும் குஸ்லிங் தலைவராயிருப்பவர், குஸ்லிங் கட்சியின் ராணுவத் தலைவருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிருரென்றும், அதில் எவ்வளவு கஷ்டமான நிலைமையில் தான் வேலை செய்யவேண்டியிருக்கிறதென்று விளக்கிக் கூறியிருக்கிருரென்றும் தெரிகிறது. ஹர்டாஞ்சர் ஜோர்டில் உல்விக் என்ற இடத்திலிருந்து 2,000 நார்வீஜியர்கள் வெளியேற்றப்பட்டார்களென்றும், லேக்சிவாக் பிரதேசத்தில் இரேவல் என்ற பட்டணம் முழுவதும் காலியாக்கப்பட்டதென்றும், இன்னும் சில பட்டணங்களும் காலியாகக்கூடுமென்று தெரிகிறதென்றும், தலைமுறை தலைமுறையாக வசித்துவந்த தங்கள் தாய்நாட்டை விட்டுச் செல்லும்படி கட்டாயப்படுத்துவதால், நார்வீஜியர்கள் மிகுந்த மனக் கவலையுடன் இருக்கிருர்களென்றும், அவர் கூறுகிருர்.

நார்வீஜியன் தந்திச் செய்தி ஸ்தாபனம் இதன் காரணத்தைப்பற்றி பின்வருமாறு கூறுகிறது :—"நார்வீஜியர்கள் கடுமையுடன் நாடு கடத்தப்படுவதற்கு ஒரு காரணமிருக்கிறது. நார்வேயின் மேற்குக் கரையோர ஜில்லாக்கள், ஆகாய விமானச் சாலைகள் ஏற்படுத்துவதற்கும், இதர ராணுவ ஏற்பாடு ஸ்தாபனங்கள் ஏற்படுத்துவதற்கும், ஜெர்மானியர்களுக்கு வேண்டியிருக்கின்றன."

போலந்துநாட்டு மக்களை நாஜிகள் எப்படி கொடுமைப்படுத்தி வருகிருர்கள் என்பதைப்பற்றி, நாஜிகளுக்கு விரோதமான ஜெர்மன் பத்திரிகை "டைசீடங்" சில விவரங்களை வெளியிட்டிருக்கிறது. இந்த விவரங்கள் போலந்திலிருந்து லண்டனுக்கு அனுப்பப்பட்ட சில கடிதங்களிலிருந்து எடுக்கப்பட்டன. அவை பின் வருமாறு ;—

15-வயதுக்கு மேற்பட்ட போலிஷ் பெண்கள் ஏராளமாக ஜெர்மனிக்கு அனுப்பப்படுகிருர்கள். அங்கு 'இஞ்செக்ஷன்'கள் கொடுக்கப்பட்டு, அவர்கள் மலடிகளாக ஆக்கப்படுகிருர்கள். சென்ற பிப்ரவரி மாதம் ஒரு விபரீதமான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 14-வயதுக்கு மேற்பட்ட பள்ளிக்கூடப் பையன்களுடைய பெயரும், பெண்களுடைய பெயரும் ஜெர்மன் அதிகாரிகளுக்கு இதன்படி அனுப்பப்பட்டது. அவர்கள் தெருக்களிலும், தங்களுடைய வீடுகளிலும் கைது செய்யப்பட்டு ஜெர்மனிக்கு அனுப்பப்பட்டார்கள். அங்கு வைத்திய சிகிச்சை என்ற பெயரால், அவர்களுடைய ஆண்மைத்தனமும், பெண்மைத்தனமும் வேரறுக்கப்படுகின்றன. அவர்கள் பின்னுல் கலியாணம் செய்துகொண்டாலும், அவர்களுக்குச் சந்ததி உண்டாகாமல் ஜெர்மனியர்கள் செய்துவிட்டார்கள்.

யூகோஸ்லாவிய குடியானவர்கள் தங்களுடைய மாசூல்களைக் கொளுத்திவிடுகிருர்களாம். அதிகாரிகள் கொலைத் தண்டனை கொடுத்தும் இது நிற்கவில்லை என்று சொல்லப்படுகிறது.

போலந்தில் அநேக பாதிரிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

**10 நடுநிலைமை நாடுகள்.**

தென்னமெரிக்காவில் இருந்த ஜெர்மன் நாஜித் தலைவர்கள் ஸ்விட்சர்லாந்துக்கு அனுப்பப்பட்டிருக்கிருர்கள்.

பெரு ஜர்மனியுடன் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டது.

**11. ரஷ்யாவும், ஜெர்மனியும்.**

ரஷ்ய யுத்தத்தின் போக்கைப்பற்றியும், ஜெர்மனியின் முயற்சிகளைப்பற்றியும் உள்ள விவரங்களை இந்த இதழில் வேறொரு கட்டுரையில் காணலாம்.

யூக்ரெயினுக்காக மும்முரமான யுத்தம் நடந்து வருகிறது. அதன் தலைநகரான கீவை கொறடா முனையைப்போல் இரண்டு பகுதிகளாகச் சென்று வளைத்துக்கொள்ள ஜெர்மனி முயற்சிக்கிறது.

ஸ்மோலென்ஸ்க் பிரதேசத்தினருகில் நடந்த யுத்தத்தில் ரஷ்யர்கள் ஜெர்மனியர்களைப் பலமாக எதிர்த்துத் தாக்கினுர்கள். ஜெர்மனியர்களுடைய சிறந்த பட்டாளமொன்று முழுவதும் நிர்மூலமாக்கப்பட்டது.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்ருக விடாமல் சேர்த்துவரவும்.**
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.